# மௌலவி/ மௌலவிய்யா எனும் பட்டத்தை தேசிய அடையாள அட்டையில் சேர்த்துக்கொள்வதற்கான முழுமையான வழிகாட்டல்

## வழிமுறை:

01. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

02. மௌலவி சான்றிதழின் நிழற்படப் பிரதி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட அரபிக் கல்லூரியின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

    (i) விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும் அரபிக் கல்லூரி அதிபரது கையொப்பம் ஏற்கனவே திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கையொப்பங்களில் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

    (ii) விண்ணப்பதாரரின் பெயர் அரபிக் கல்லூரியினால் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாணவர் பெயர் பட்டியலில் காணப்படல் வேண்டும்.

03. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படுவதை விண்ணப்பதாரர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

04. விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய ஆவணங்கள் **முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், த.பெ. இல. 180, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10** எனும் முகவரிக்கு நேரடியாக சமுகமளித்து சமர்ப்பித்து மௌலவி/ மௌலவிய்யா சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும்.

05. திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மௌலவி/ மௌலவிய்யா சான்றிதழை ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதனூடாக மௌலவி/ மௌலவிய்யா எனும் பட்டத்தை தேசிய அடையாள அட்டையில் சேர்த்துக்கொள்ள முடியும்.

## விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

01. கடவுச்சீட்டு (Passport) அளவு வர்ண புகைப்படம் ஒன்று விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டப்பட வேண்டும்.

02. தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி.

03. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரபிக் கல்லூரியினால் வழங்கப்பட்ட மௌலவி சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி.

04. அல் ஆலிம் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி. (காணப்படின்)

05. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி.

06. கிராம உத்தியோகத்தர் நற்சான்றிதழின் மூலப்பிரதி.

07. தமது பிரதேச பள்ளிவாயல் அல்லது பட்டம் பெற்று வெளியேறிய அரபிக் கல்லூரியில் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழின் மூலப்பிரதி.

08. விண்ணப்பதாரர் தடை செய்யப்பட்ட எந்த அமைப்புகளுடனும் தொடர்பின்மையை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசி. (தீவிரவாதத் தடுப்பு சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்), No.48 of 1979)